# அறிவித்தல்

இலங்கை சனாநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 40 மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 7 ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம், சனாதிபதி பதவிக்காக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை தேர்வு செய்துகொள்வதற்காக, 1981 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளைத் தழுவி 2022.07.20 ஆம் திகதி நடாத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பின்போது உபயோகிக்கப்பட்ட வாக்களிப்புச் சீட்டுக்கள், அச்சட்டத்தின் 18 ஆம் வாசகத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் 2023.03.24 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் அனுமதியுடன் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்களால் அழிக்கப்பட்டது என்பதை பாராளுமன்றத்துக்கு அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.